மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Chulunthi Novel and Religion's

Dr. P. Lenin

Assistant Professor, Department of Tamil, Loyola College, Chennai, India

Manuscript ID :
MT127A0058

Volume : **2**

Issue : **3**

Month : **September**

Year : **2022**

Received: 20.09.2022
Revised: 22.09.2022
Accepted: 24.09.2022
Published: 30.09.2022

Pages : 147-154

DOI:
10.5281/zenodo.7372004

ABSTRACT:

The literary structure of Tamil language itself has a long antiquity and antiquity. Classical language, which has so many literary grammars, contains various literary genres. Devotional literature is one of them. Through this literature, the good ideas and virtues of various religions are found in our language. This article examines the news about Tamil religions in the novel Chulunthi.

KEYWORDS:

Religions, Worships, Cults, Saivism, Vaishnavism, Aasivakam, Jainism, Christianity.

சுளுந்தீ நாவலும் சமயங்களும்

முனைவர் பி. லெனின்,
உதவி பேராசிரியர்,
தமிழ்த்துறை, இலயோலா கல்லூரி, சென்னை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

தமிழ்மொழியின் இலக்கியக் கட்டமைப்பானது நீண்ட நெடிய தொன்மையையும் பழமையையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அவ்வளமான இலக்கிய இலக்கணங்களைக் கொண்டு உள்ள செவ்வியல் மொழி பல்வேறு இலக்கிய வகைகளையும் தன்னுள்ளே அடக்கியுள்ளது. அதனுள் பக்தி இலக்கியம் ஒன்றாகும். இவ்விலக்கியத்தின் வாயிலாக பல்வேறு சமயங்களின் நற்கருத்துக்களும் நற்பண்புகளும் நிறைந்து நம்மொழியில் காணப்படுகின்றன. சுளுந்தீ என்னும் நாவலில் இடம்பெற்றுள்ள தமிழ் சமயங்கள் குறித்து செய்திகளை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

கருச்சொற்கள்

சமயங்கள், வழிபாடுகள், சைவம், வைணவம், ஆசீவகம், சமணம், கிறத்தவம்.

முன்னுரை

எழுத்தை அரசியலாகவும் அரசியலை எழுத்துக்கள் மூலமாகவும் விளக்க முனைவது படைப்பிலக்கியமாகும். படைப்பாளியைப் புரிந்து கொள்ளாது அவனது படைப்பினை வாசித்தோமானால் நாதமற்றதாகிவிடும் அப்படைப்பு. படைப்பிலக்கியம் என்பது புனைவுகள் மட்டுமே என்ற கண்மூடித்தனமான நம்பிக்கையின் காரணமாக வரலாற்றை மறுவாசிப்பு செய்வதோடு மட்டுமல்லாது இலக்கியத்தின் வாயிலாகத் தொன்மம், பழக்க வழக்கங்கள், அரசியல், சமூகம், பொருளாதாரம் என பல்வேறு சமூகக் கட்டமைப்புகள் சார்ந்த திறனாய்வுக் கண்ணோட்டத்தில் ஆய்வு செய்வதும் முக்கியமாகும்.

சுளுந்தீ நாவலில் தமிழும் சமயமும் குறித்த கருத்துகளை ஆய்வதாகவும் அச்சமயம் சார்ந்த கருத்தியல் நுட்பத்தினை விளக்குவதாகவும் இக்கட்டுரை அமைகிறது.

சமயம்-பொருள் விளக்கம்

சமயம் அல்லது மதம் என்பது கடவுள் நம்பிக்கையின் அடிப்படையிலான கோட்பாட்டமைப்புகளில் ஒன்றாகும். ஒரு கடவுள் அல்லது கடவுள்கள் மீதான நம்பிக்கையும் அது தொடர்பான செயற்பாடுகளையும், சமயச் சடங்குகளையும் மதம் குறிக்கிறது.

பண்டையத் தமிழ் இலக்கண நூல்களான தொல்காப்பியம், சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டு, எட்டுத்தொகை போன்ற நூல்கள் பண்டையத் தமிழர்களின் தொடக்கக்கால சமய வாழ்வைக் காட்டுகின்றன.

“சமயம்” அகராதி விளக்கம்

சமயம் - எல்லை, காலம், தருணம், வேளை, மதம், உடன்படிக்கை, (கழகத்தமிழ் அகராதி) என்று கழகத்தமிழ் அகராதி பொருள் விளக்கம் தருகிறது. இவற்றினுள் சமயம் என்னும் சொல்லிற்கு மதம் என்னும் சொல்லாடல் பொருள் கொள்ளும் வண்ணம் உள்ளது.

தமிழ்ச்சமயங்கள்

காணபத்யம்	-	விநாயகர் வழிபாடு
கௌமாரம்	-	முருகன்வழிபாடு
சௌரம்	-	சூரிய வழிபாடு
சைவம்	-	சிவ வழிபாடு
சாக்தம்	-	சக்தி வழிபாடு
வைணவம்	-	திருமால் வழிபாடு

போன்றவைத் தமிழ்ச்சமயங்களாக அறிஞர்களாலும் இலக்கணிகளாலும் சுட்டிக் காட்டப்பட்டவைகளாகத் திகழ்கின்றன.

சுளுந்தி நாவலும் தமிழ்ச்சமயமும்

அங்காள பரமேஸ்வரி (சாக்தம்)

ஏகாலி சமயன் சனங்கள் பேசுவதைக் கேட்டபடி அந்த வழியாகப் போனவன் ‘படச்சவன், வாயில்லாச் சீவன் மூலமாகக் கேடுகாலத்த மனுசனுக்கு சமிக்ஞை காட்டுவான்’ என்று பேசியபடியே கடந்தான். இவன் பேசுவதை எப்போதும் காது

கொடுத்துக் கேட்டு ஏறெடுத்துப் பார்க்காத சனம், இன்று மங்கலான இருட்டிலும் அவனது முகத்தை உற்றுப் பார்த்தது. அரண்மனை வலப்புறச் சுவரில் குடி கொண்டுள்ள அங்காள பரமேஸ்வரியிடம் அரண்மனைக்கு ஏதும் வந்திடக்கூடாது' எனச் சிலர் வேண்டிக்கொண்டார்கள்.

மேற்கண்டக் கூற்றின் படி இந்நாவலில் சக்தி வழிபாட்டை வலியுறுத்தும் (சாக்கதம்) காளி வழிபாடு தொடர்பான தரவுகள் இடம்பெற்றுள்ளதனையும் தமிழ்ச்சமயம் தொடர்பான கருத்தியல் இடம்பெற்றுள்ளதையும் அறிந்துகொள்ள முடிகிறது.

கருப்பண்ண சாமி (ஆசீவகம்)

'இந்த ஊருக்கு ராவுத்தமாரு கொண்டு வந்த கழுத இல்லேன்னா நாம அழுக்குப் பொதி சொமந்தே உறுப்புத் தள்ளி சாக வேண்டியதான். இதுக எந்தத் தேசத்தில பொறந்ததோ நம்ம ஊரு சத்தியத்துக்குக் கட்டுப்பட்டதுபோல, பழகின பாதை மாறிப் போனதில்ல. இந்நேரம் குடகனாத்து வண்ணாந்துறைக்குப் போயிருக்கும்' சொல்லி முடிக்க ஆறு வந்தது. ஆற்றங்கரை மேட்டிலிருந்து எட்டிப் பார்த்தான். வெள்ளாவி முன்பாக வாலை ஆட்டியபடி நின்றிருந்தது கழுதை. வெள்ளாவி கருப்பண்ண சாமியைக் கும்பிட்டு, உடைந்த வெள்ளாவிப் பானையை எடுத்து எறிந்து விட்டுப் புதிய பானையை அதில் வைத்து மண்ணைக் குழைத்துப் பூச்சு போட்டான். இக்கூற்று குலதெய்வ வழிபாட்டு முறைகளில் ஒன்றைக் குறிப்பிடுகிறது. மேலும் இம்முறையானது ஆசீவகம் எனும் வழிபாட்டுக் கூறினை உள்ளடக்கியது என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வழிபாட்டு முறையும் தமிழ்ச்சமயத்தையே குறிகின்றது. சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை போன்ற நூல்களில் ஆசீவகக் கூறுகள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன.

காமாட்சியம்மன் (சாக்தம்)

காமாட்சியம்மன் கோயிலைத் தழுவிப் போகும் மூங்கிலாறு, பன்றிமலை உச்சியில இருக்கும் பெருமாள் மலை, அம்மா மெத்திலிருந்து உருவெடுத்து வருது. இப்ப இருக்கிற பூசாரியின் தாத்தன் உசுரோட இருந்தப்ப மூங்கிலாத்தில ஓலைக் கொட்டான் மிதந்து வந்து அரண்மன ஓரத்து மூங்கில் பொதரில சிக்கிடுச்சு. அதுக்குள்ள இருந்த சின்னக் குழந்த கெக்ககெக்கென சிரிச்சிருக்கு. குழந்த சிரிப்பு கேட்டு பார்த்தப்ப ஓலைக் கொட்டானில அழகான பெண் குழந்த, மழை, வெள்ளத்தில ஊறி நனைஞ்சும் நடுங்காம, அழுகாம மூணு மாத குழந்த சிரிச்சதால தெய்வ சக்தியான குழந்தையா இருக்குமென நெனச்சு அத தூக்கியாந்து அவங்களோட குல தெய்வமான

காமாட்டம்மாவை பேரு வைச்சு, தன் பெத்த பிள்ளையாகவே நினைச்சு வளர்த்தாரு. இந்த காமாட்டம்மா தான் பின்னாளில் காமாட்சியம்மன் எனப் பெயர் மாறிச்சு.

மேற்கண்டக் கூற்றானது சக்தி வழிபாட்டை வலியுறுத்துவதுடன் இச்சக்தி வழிபாடு எவ்வாறு தோன்றியது என்ற செய்தியையும் முன்னிறுத்துகிறது. மேலும் ஈண்டிங்கு இத்தரவும் தமிழ்ச்சமயம் குறித்து இடம்பெற்றுள்ளமையை அறியமுடிகிறது.

சமணமுனிகள் (சமணம்)

சைவம், வைணவம்போல் முன்னொரு காலத்தில ஆசா பாசங்களத் துறந்து பிறந்த மேனியா சமணமுனிகள் இருந்தாங்க. அவங்க அறிவு முத்தினா பாறைப் பொடவுகள்ள தங்குவாங்க. அங்க இறுதிக் காலத்தில தண்ணி மட்டுமில்ல, உமிழ்நீரக் கூட முழுங்காம நாட்களைத் தள்ளுவாங்க. இதனால உடம்பில் ஊன் வற்றிடும். அவங்க உடம்பிலிருந்து ஆவி பிரியும்போது எந்தச் சலனமும் இருக்காது. ஆவி பிரிந்த உடம்பில ஊன் இல்லேன்னா அந்தச் சடலத்த காக்கா, கழுகு, நாய், நரி மட்டுமில்ல எந்தச் சீவசந்தும் மோந்துகூடப் பாக்காது. ஒரு மண்டலத்திற்குள்ள எலும்புகளக் காத்து குடிச்சுடும். காது வளர்த்த அந்தச் சமணமுனிகள் பூமியில் பொறந்த சீவனுக்கெல்லாம் பண்டுவம் பார்த்தாங்க.

வடமாநிலத்தில் இச்சமயம் பிறந்திருந்தாலும் தமிழ்மண்ணில் செழித்து வளர்ந்த சமயங்களில் ஒன்றாக விளயங்கியதும், இச்சமயத்தைப் நம்மண்ணி பெரும்பாலானவர்கள் பின்பற்றி வாழ்ந்துள்ளனர் என்பதும் இந்நாவல் எழுதப்பட்டக் காலத்திலும் தமிழ் சமணமுனிகள் வாழ்ந்து மக்கள் தொண்டாற்றியுள்ளனர் என்பதும் அறியலாகிறது.

ஜக்கம்மா (சாக்கதம்)

இவன் பயந்தது போலவே பசு, கிடாரிகள் நுரை அடித்துச் சினைக்குக் கத்துவதை நிறுத்தின. எக்காளமிட்ட கிடாரிகள், காளை 'விழுந்ததைப் போல் குன்னியது. 'தனத்தில் நுரை அடிக்கலேன்னா தனத்த காள மோந்து பாத்துத் தாண்டாதே'. நினைக்க நினைக்க இவனது மனம் நிலை கொள்ளவில்லை. யாராவது நமக்குச் செய்வென வச்சிருப்பாங்க. அதுக்கு மொதல்ல பார்ப்போம் தனது குலசாமியான ஜக்கம்மாவை வேண்டினான். கோனூரில் இருக்கும் கோடாங்கி நாயக்கனைப் போயி பார்த்து கேட்டா பிரச்சினை தீரும்' என்று ஜக்கம்மா கனவில் வந்து சொன்னது. மறுநாள் கோடாங்கி நாயக்கனைச் சந்தித்து விசயத்தைச் சொன்னான். 'நாளைக்கு உன் தொழுவத்துக்கு வந்து உறுமி அடிச்சு குறி பாக்குறேன்' எனச் சொல்லி அனுப்பிவைத்தான் கோடாங்கி நாயக்கன்.

மேற்கண்ட இக்கூற்று தெலுங்கு நாயக்கர்களின் வழிபாட்டில் இடம்பெற்றுள்ள சக்தி வழிபாடுகளில் ஒன்றாக விளங்குகிறது. ஜக்கம்மா எனும்பெண் தெய்வம் தெலுங்கர்களின் ஆட்சிகாலத்தில் தமிழகத்தில் வழக்கில் உள்ள வாழிபாட்டுமுறைகளில் ஒன்றாகவும் இன்றுவரை தொடர்ந்து வழக்கிலுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மளிச்சியம்மன் (சாக்கதம்)

எங்கள்ல வயது வந்த ஆம்பளப் பிள்ளைகளுக்குக் கலியாண ஆச வந்தா, நாடு விட்டு நாடு போய் பொண்ணுகளத் தேடுவோம். கண்ணுக்குப் புடிச்ச பொண்ண தூக்கியாந்து ராசா முன்னாடி பொண்ணு மாப்பிள்ளையா நிற்போம். மளிச்சியம்மன் கோயிலுக்குக் கூட்டிட்டுப் போய் ஊணாங்கொடியப் பிடிங்கி ரெண்டு பேரு கையில கொடுத்து மால மாத்திக்கிறச் சொல்லி நல்லா இருங்கனு அனுப்பி வைப்பாரு ராசா. மிளிச்சியம்மன் எனும் பெண் தெய்வ வழிபாடும் தமிழ்ச்சமயத்தில் சாக்கதம் வழிபாட்டு முறைகளில் ஒன்றாகத் திகழ்கிறது. இந்நாவல் பல்வேறு இடங்களில் சக்தி வழிபாட்டு முறைகளை முன்னெடுத்து செல்கிறது.

சடாமுனி (ஆசீவகம்)

எப்பவுமே காட்டுக்குள்ள சுளுந்தப் பிடிச்சு போகாத எங்க சனம், கருங்காடுங்குறதால சீவசந்துக்கள எதிர்கொள்ள களுந்தி ஏந்தி மெல்ல எட்டு வைச்சுப் போனாங்க. கருத்துப் பெருத்திருந்த ஆலமரத்து அடியில் தவக்கோலத்தக் கலைச்சு கோபமாக இருந்தத, தோனிமலை ராசா பார்த்துச் சொன்னான். நூறு அம்புகள ஒன்னா ஒரு இடத்தில் எய்தா எப்படி இருக்கும்? அதப்போல் எல்லா கண்ணும் முனியப் பாத்தாங்க. கண்ணுவ ரத்தம் கசிய ரணகோலமா இருந்தான் அந்தச் சடாமுனி. எல்லாரும் அவன் கால்ல விழுந்து விசயத்த சொன்னாங்க. அதோ இவங்கதானா? பாருங்க என்று ரெண்டு கல்தூணைக் காட்டினான் சடாமுனி. எல்லாரும் திரும்பிப் பார்க்க அந்தக் கல்தூண் ரெண்டும் ஓடி வந்த பொண்ணு மாப்பிள்ளையாக உயிரோட காட்சி தந்து அடுத்த கணம் கல்லான எனச்சொல்ல, கூளப்பள்ளம் வந்தது. அங்கு கல்மதம் தோண்டிக்கொண்டே பேசினான் பெரிய பூதகன். ஆசீவக வழிபாட்டு முறைகளில் சடாமுனி வழிபாடும் இடம்பெறுபவையே, இம்மண்ணின் பூர்வீகக் குடிகளின் வழிபாட்டுத் தெய்வங்களில் பெரும்பாலும் ஆசீவக நெறியைச் சார்ந்து இருப்பதற்குக் காரணம் இந்து சமயத்தில் நெருடலான அனுகுமுறைகளும் மற்றும் (நெருக்கமான) முன்னோர் வழிபாட்டு முறைகளுமே முதற்காரணமாம்.

கிறித்தவம்

நீங்கள் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றுங்கள். வரி செலுத்த வேண்டியோருக்குத் தலை வரியையும், சுங்க வரி செலுத்த வேண்டியோருக்குச் சுங்க வரியையும் செலுத்துங்கள்.!! அஞ்ச வேண்டியவர்களுக்கு அஞ்சுங்கள். மதிக்க வேண்டியவர்களை மதியுங்கள். நீங்கள் யாருக்கும் எதிலும் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவதே நீங்கள் செலுத்த வேண்டிய ஒரே கடனாய் இருக்கட்டும். பிறரிடத்தில் அன்பு கூறுபவர் திருச்சட்டத்தை நிறைவேற்றுபவர் ஆவார் ஆமென்.

‘விபசாரம் செய்யாதே, கொலை செய்யாதே, களவு செய்யாதே, பிறருக்குரியதைக் கவர்ந்திட விரும்பாதே. கடவுளின் கட்டளைகளும் பிற கட்டளைகளும் உன் மீது அன்பு கூர்வதுபோல், உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக’ என வாசித்தவர், வறண்ட தொண்டையைச் சரி செய்ய எச்சியை விழுங்கிக்கொண்டு தொங்கவிட்ட கைகளை மீண்டும் உயர்த்திக் கூட்டத்தினர்மீது பார்வையைச் செலுத்தினார். சனங்கள் தான் பேசுவதை அமைதியாகக் கேட்பதைப் புரிந்துகொண்டார்.

அன்பு யாருக்கும் தீங்கிழைக்காது. களியாட்டம், குடிவெறி, கூடா ஒழுக்கம், காமவெறி, சண்டைச் சச்சரவு ஆகியவற்றைத் தவிர்ப்போமாக. தீய இச்சைகளைத் தூண்டும் ஊனியல்பின் நாட்டங்களுக்கு இடம் கொடுக்க வேண்டாம். இயேசுவின் சிலுவையை அணிந்து கொள்ளுங்கள். இறைவனிடம் வேண்டுங்கள். ஒருவருக்கொருவர் பரிந்து பேசுங்கள். ஆள்பவர்கள் மீது நன்றி செலுத்துங்கள். இறைப்பற்றும் கண்ணியமும் நிறைந்தவர்களாய் தொல்லையின்றி அமைதியோடு வாழ அரசர்களுக்காகவும் உயர் நிலையிலுள்ள எல்லா மனிதர்களுக்காகவும் மன்றாடுங்கள். இதை உங்களிடம் சொல்லி நல்வழிப்படுத்த நான் நற்செய்தி அறிவிப்பவனாகவும் திருத்தூதனாகவும் விசுவாசத்தையும் உண்மையையும் பிற இனத்தாருக்குக் கற்பிக்கும் போதகனாகவும் ஏற்படுத்தப்பட்டேன். நான் சொல்வது உண்மையே, பொய் இல்லை என்று சொல்லி, உச்ச கதியில் ஆகவே அன்பர்களே, ஆண்கள் சினமும் சொற்பூசலும் இன்றி எவ்விடத்திலும் தூய உள்ளத்தோடு கைகளை உயர்த்தி இறை வேண்டல் செய்யுமாறு விரும்புகின்றேன். அவ்வாறே பெண்கள் பின்னற்சடை, பொன், முத்து, விலையுயர்ந்த ஆடைகள் ஆகியவற்றால் தங்களை அணி செய்து நாணத்தோடும் தன்னடக்கத்தோடும் ஏற்புடைய ஆடைகளைக் கொள்ளாமல் அணிய வேண்டும். கடவுள் பற்று உள்ளவர்களான நாம் சொல்லிக்கொள்ளுவது பெண்களுக்கு ஏற்ற அணிகலன்கள் தற்செயல்களே, ஆமென் என்று ஒரு சாமம் காலம்வரை விவிலியத்தை வாசித்தார்.

இந்நாவலில் பல்வேறு சமயக்கூறுகளுடன் மேலைநாட்டு சமயக் கூறுகளும் அடங்கியுள்ளது. கிறித்தவம் தொடர்பான தரவுகள் பெரும்பாலும் இயேசு சபையினரின்

செயல்பாடுகள் அவர்களின் இறையியல் பணிகள் குறித்தச் செய்திகளே மிகுதியாக இடம்பெற்றுள்ளது என்பது அறியலாகிறது.

சிவ வழிபாடு

குலகுருவின் ஆலோசனைகளை ஆசியாகவே பார்க்கிறேன். இது குறித்து விவாதித்து கவனம் செலுத்துவோம். இனி நல்லதே நடக்கும் என்று அனுசரணையாகப் பேசினார் மன்னர். மன்னரின் முகத்தைப் பார்த்த புலவர் சிவகுருநாத குருக்கள், அவசரம், தனியாகப் பேச வேண்டும் என்பதைக் கண்சாடையாகக் காட்டினார். இதைப் புரிந்துகொண்ட மன்னர் எழுந்து ஆலோசனை கூடத்திற்குப் போனார். மதுரை நாட்டின் எல்லையில் உள்ள சைவ மடத்தின் குலகுருக்கள் நவராத்திரி விழாவுக்கு அழைப்புக் கொடுத்தால் மௌனமே பதிலாக வரும். இவங்க சிவனைத் தவிர வேற தெய்வத்த வணங்க மாட்டாங்க.

பெருமாள் வழிபாடு

திருகோட்டியூரில் வைகுண்ட தரிசனத்திற்கு மேலே போகப் போக நாலாவது நிலைக்குப் போகும் படிக்கட்டு ஆள் நுழையுமளவுக்கு ஒடுக்கமா இருக்கும். அவங்கள கோபுரப் படிக்கட்டில் ஏற்றி கீழும் மேலும் அடைச்சா மூச்சுத் திணறிச் சாவாங்க. திருக்கோட்டியூர் சௌமியநாராயணப் பெருமாள் கோயிலுக்குள் நுழைந்தார்கள். முதலில் வைகுண்ட தரிசனத்தைப் பார்த்து வருவோம். எல்லாரும் என் பின்னே வாங்க என்று சொல்லியபடி நடந்தான். இழுத்துப் போய் விட்டுவிடுவது அரண்மனத் தண்டனை. இந்தர் குன்றிய எதினால் போதும் செத்தவங்க ஆலிகள் ஒன்னு சுத்தோடு சேத்து காட்டில எசலங்கள் அகட்டிட்டுப் விரிவாங்கள்று அரண்மனையரே சொல்லி இருக்க குறிந்த நினைவுகள் வந்து வாந்து போக சட்டப்பாறை சுந்தது நல்ல பாத இருக்க ஏன் இதுவழியா இவரு எறினாரு. மேற்கண்ட கூற்றானது திருக்கோட்டியூர் சௌமியநாராயணப் பெருமாள் வழிபாடு அக்கோயிலின் அமைப்புமுறை குறித்தும் தரவுகள் இடம்பெற்றுள்ளதன் வழி வைணவம் தொடர்புடைய செய்திகளும் இடம்பெற்றுள்ளமையை அறியப்படுகிறது.

முடிவுரை

தமிழ் மொழியானது பல்வேறு சமய பக்தி இலக்கியங்களை உள்ளடக்கியது. அனைத்து இலக்கிய வளங்களும் நிரம்பப் பெற்ற மொழியாகவும் உள்ளது. நாயக்கர் காலகட்டத்தில் நடைபெற்ற நிகழ்வுகளை மையமாகக்கொண்டு எழுதப்பட்ட இந்நாவல் பல்வேறு கருத்துக்களுடன் சமயம் வழிபாட்டு முறைகளையும் முன்னெடுத்துச் செல்கிறது. இந்நாவல் இந்து, கிருத்தவம், சமயம் கருத்துகளையும் இஸ்லாமியம் சமயக் கருத்துக்கள் மற்றும் சமண சமயக் கருத்துகளை விளக்குவதாகவும்

அமைந்துள்ளதனை அறியமுடிகிறது. பல்வேறு சமயம் தொடர்பான கருத்துகளைச் சுமந்திருக்கும் வரலாற்று நாவலாகவும் திகழ்கிறது.

தொகுப்புரை

சுளுந்தீ நாவலும் சமயமும் என்னும் இந்த ஆய்வு கட்டுரையில் சமயம் குறித்த அறிஞர்களின் கருத்து, மற்றும் தமிழ் அகராதிகளின் இச்சொல் பொருள் போன்றவை விளக்கப்பட்டுள்ளது. தமிழ் சமயங்களின் வகைபாடுகள், சுளுந்தீ நாவலில் இடம்பெற்றுள்ள தமிழ் சமயங்கள் மற்றும் அயலக சமூகங்கள் என இரண்டு பொருண்மையில் தமிழ் சமூகங்களில் ஆறு வகையான சமயகங்களும் பிற சமயங்களில் சமணம், பவுத்தம், இஸ்லாமிய, கிருத்துவம் போன்ற சமயங்கள் குறித்த செய்திகள் இக்கட்டுரையில் ஆராய்ந்து விளக்கப்பட்டுள்ளது.

துணைநூற்பட்டியல்

1. கழகத்தமிழ் அகராதி. கழக வெளியீடு.2005
2. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி-க்ரியா-2014
3. சுளுந்தீ. இரா.முத்துநாகு. ஆதி பதிப்பகம். திருவண்ணாமலை-2021

REFERENCES

1. Kazhagam Tamil Dictionary. Corporation Publication.2005
2. Contemporary Tamil Dictionary of Kriya-Kriya-2014
3. Sulundhi. Ira. Muthunagu. Adi Publishing House. Thiruvannamalai-2021